# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

SUPEEDSAM – EVERYTHING FOR PEOPLE

செவ்வாய்க்கிழமை 07.09.2021 supeedsam.com supeedsam@gmail.com







# ஜனநாயக செயற்பாடுகளை நசுக்க ஜனாதிபதி நடவடிக்கை



(ராஜ்)

அத்தியாவசிய சேவைகள் என கூறி, ஏதேனுமொரு சேவையை பிரகடனப்படுத்த வேண்டும் என்றால் அதற்கென்று ஒரு சட்டமே இருகின்றது. அதன் கீழே பிரகடனப்படுத்தலாம்.

ஆனால், இதனை சாதகமாக பயன்படுத்தி ஜனாதிபதி இரவோடு இரவாக தனது நிறைவேற்று அதிகாரத்தை பயன்படுத்தி ஜனநாயக செயற்பாடுகளை நசுக்கும் நடவடிக்கையை முன்னெடுக்க நினைக்கின்றார்.

நாட்டை இருட்டுக்குள் வைத்திருக்கவே ஜனாதிபதி முயற்சிக்கின்றார். நாட்டிலே விலைவாசி கட்டுப்படுத்த வேண்டும் என்பது உண்மை.

ஆனால் இதனை இப்படியாக செய்வதை

02 ஆம் பக்கத்தில்...

# அவசரகால சட்டங்களை இரவோடு இரவாக கொண்டுவர முடியும்

## கூட்டமைப்பு எச்சரிக்கை

(ராஜ்)

அவசரகால நிலைமை பிரகடன்படுத்தப்பட்டுள்ளமை மூலம் ஜனாதிபதியால் அவசரகால சட்டங்களை இரவோடு இரவாக கொண்டுவர முடியும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற ஜனாதிபதி வெளியிட்ட அவசரகால விதிமுறைகளை

02 ஆம் பக்கத்தில்...

# அவசரகாலச் சட்டம் மேலதிக வாக்குகளால் நிறைவேறியது


நாட்டில் அவசரகால ஒழுங்குவிதிகளை நிறைவேற்றுவதற்கான பிரேரணை நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட நிலையில் மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

குறித்த பிரேரணையானது ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவினால் நேற்று முன்வைக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் குறித்த பிரேரணை தொடர்பான விவாதம் காலை 10.30 மணியளவில் ஆரம்பமாகியிருந்தது.

02 ஆம் பக்கத்தில்...

# விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தக் குற்ற விவகாரம் ஆவணத்தை ஜெனிவா அனுப்ப மறுக்கும் தமிழரசுக் கட்சி



(ஜூட்)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தக் குற்றங்களை விசாரணை செய்ய வேண்டும் என இலங்கை தமிழரசுக் கட்சி கோரவில்லையென அந்த கட்சியின் மூத்த உறுப்பினர் சி.வி.கே. சிவஞானம் தெரிவித்துள்ளார்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்களுக்கு இடையிலான இணைய வழியிலான கலந்துரையாடல்

02 ஆம் பக்கத்தில்...

# கிழக்கு மாகாணத்தில் மூன்று மாத காலப்பகுதியில் 555 பேர் கோவிட் தோற்றினால் மரணம்

## டெல்டா பிறள்வு காரணமாக இருக்கலாம்; மாகாண பணிப்பாளர் வைத்தியர் ஏ.ஆர்.எம்.தௌபீக்



(நமது நிருபர்)

கடந்த மூன்று மாத காலப்பகுதியில் கிழக்கு மாகாணத்தில் 555பேர் கொவிட் தொற்றினால் மரணமடைந்துள்ளனர். இச்சடுதியான அதிகரிப்பு டெல்டா பிறள்வினால் ஏற்பட்டிருக்க வாய்ப்புண்டு அத்துடன் தடுப்பு மருந்து பெறாதவர்களேமிக அதிகமாக மரணத்தை தழுவுகின்றனர் என கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஏ.ஆர்.எம்.தௌபீக் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண கொவிட் நிலமை குறித்து கருத்து தெரிவிக்கும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்;

02 ஆம் பக்கத்தில்...

# ஜிப்ஸிஸ் இசைக்குழுவின் தலைவர் சுனில் பேரேரா காலமானார்



இலங்கையின் இசை துறையின் பிரபலமான இசை குழுவான ஜிப்ஸிஸ் இசைக்குழுவின் தலைவர் சுனில் பெரேரா காலமாகியுள்ளார்.

கொவிட் தொற்றுக்குள்ளாகி கொழும்பு தனியார் வைத்தியசாலையில் 3 வாரங்கள்

02 ஆம் பக்கத்தில்...

# மட்டக்களப்பில் ஆண் ஒருவரின் சடலம் மீட்பு!!

(மட்டக்களப்பு விசேட நிருபர்)


மட்டக்களப்பு நல்லையா வீதியில் அமைந்துள்ள விடுதி ஒன்றில் இருந்து ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

செல்வரெட்ணம் செல்வ குழேந்திரன் எனும் 73 வயது மதிக்கதக்க ஒருவரே இவ்வாறு சடலலமாக மீட்கப்பட்டுள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...

# பொருட்கள் பதுக்கல்கள் தொடர்பில் மாநகர சபையூடாகவும் திடீர் சோதனை மேற்கொள்ளப்படும்

## மட்டு மாநகர முதல்வர்



(துதிமோகன்)

பொருட்கள் பதுக்கல்கள் தொடர்பில் மிக விரைவில் மாநகரசபையூடாகவும் திடீர் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட இருக்கின்றன. அது மட்டுமல்லாது, சுகாதாரப் பிரிவினர், நுகர்வோர் அதி

02 ஆம் பக்கத்தில்...






# வேகமெடுக்கும் டெல்டா பிறழ்வுகள்

## முடக்கத்தை இறுக்கமாக்கவும் இலங்கை மருத்துவ சங்கம்

(காந்தன்)

நாட்டில் தற்போது டெல்டாவின் பிறழ்வுகளே வேகமாகப் பரவுகின்றன. இந்த பிறழ்வுகளே தொற்றாளர்கள் தீவிர நிலைமையை அடைவதற்கும் மரணங்களின் வீதம் அதிகரிப்பதற்கும் ஏதுவாய் அமைந்துள்ளன.

02 ஆம் பக்கத்தில்...

# காணாமல் போனவர்களின் உறவினர்களை காணாமல் போனோர் அலுவலகம் அச்சுறுத்துகிறது

காணாமல் போனவர்களைத் தேடும் இலங்கையின் முதன்மையான அமைப்பு, பாதிக்கப்பட்ட குடும்பங்களின் தனிப்பட்ட தகவல்களைக் கோருவதால் அச்சமடைந்துள்ளனர்.

சர்வதேச நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்ட

02 ஆம் பக்கத்தில்...






# சீனி ரூபா 85 க்கு வெளியிட்ட வர்த்தமானி எங்கே?

## அருண் ஹேமச்சந்திர கேள்வி



(கதிரவன், ரவ்பீக் பாயிஸ்)

சீனி பதுக்கல்காரர்களிடமிருந்து அரசுடமையாக்கப்பட்ட சீனி சீனி கொள்ளையர்களிடமிருந்து அரசாங்கம் 120 ரூபாய்க்கு

02 ஆம் பக்கத்தில்...




## சீனி ரூபா 85 க்கு வெளியிட்ட வர்த்தமானி எங்கே?

கொள்வனவு செய்து பொதுமக்களுக்கு நிவாரண விலையில் விற்பனை

செய்வதாக கிழக்கு மக்கள் குரல் அமைப்பின் ஊடக பேச்சாளரும் மக்கள் விடுதலை முன்னணியின் திருகோணமலை மாவட்ட அமைப்பாளருமான அருண் ஹேமச்சந்திரா குற்றம் சுமத்தியுள்ளார்

திருகோணமலையில் அமைந்துள்ள மக்கள் விடுதலை முன்னணியின் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள இந்த அசாதாரண சூழ்நிலையில் அத்தியவசிய பொருட்களின் தட்டுப்பாடு நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில் நாட்டில் பல இடங்களில் பதுக்கி வைக்கப்பட்ட சீனியினை அரசாங்கம் பறிமுதல் செய்து அரசுடமையாக்கப்பட்டதாக அரசாங்கம் கடந்த காலங்களில் அறிவித்துள்ள நிலையில் நாட்டில் சீனி,அரசி மற்றும் பால்மா போன்ற அத்தியாவசிய பொருட்களின் தட்டுப்பாடு மென்மேலும் அதிகரித்த வண்ணம் உள்ளதாகழக்கு மக்கள் குரல் அமைப்பின் ஊடக பேச்சாளரும் மக்கள் விடுதலை முன்னணியின் திருகோணமலை மாவட்ட அமைப்பாளருமான அருண் ஹேமச்சந்திரா தெரிவித்தார்.

மேலும் கடந்த காலங்களில் அரசாங்கத்தினால் ஒரு கிலோ கிராம் சீனியினை 85 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படும் என வர்த்தமானி ஒன்றினை வெளியிட்டிருந்த நிலையில் தற்போது 120 ரூபாய் முதல் 130 ரூபாய் வரை அதிகபட்ச சில்லறை விலையாக அறிவித்து புதியதொரு வர்த்தமானியை வெளியிட்டுள்ளதாகவும் முன்னர் வெளியிட்ட வர்த்தமானி எங்கே எனவும் அரசாங்கத்திடம் கேள்வி கேட்பதாக தெரிவித்த அருண் ஹேமச்சந்திரா.

இவ்வாறு 120 ரூபாய் முதல் 130 ரூபாய் வரை விற்பனை செய்வதாக அறிவித்து சீனி கொள்ளையர்களிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்டு அரசஉடைமையாக்கப்பட்ட சீனியினை அரசாங்கம் 120 ரூபாய்க்கு கொள்வனவு செய்து சீனி கொள்ளையர்களை பாதுகாத்து சீனியினை மக்களுக்கு விற்பனை செய்வதாக கிழக்கு மக்கள் குரல் அமைப்பின் ஊடக பேச்சாளரும் மக்கள் விடுதலை முன்னணியின் திருகோணமலை மாவட்ட அமைப்பாளருமான அருண் ஹேமச்சந்திரா தெரிவித்தார்.

மேலும் இவ்வாறு அரசுடமையாக்கப்பட்ட சீனியினை முன்னர் வெளியிட்ட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டவாறு ஒரு கிலோகிராம் சீனியினை 85 ரூபாய்க்கு விற்பனை செய்ய முடியாது அரசாங்கம் இதுவென விசனம் தெரிவித்த அருண் ஹேமச்சந்திர. நாட்டில் ஊரடங்கு சட்டம் அமல்படுத்தப்பட்டுள்ள இவ் அசாதாரண சூழ் நிலையில் மக்களின் அன்றாட வாழ்க்கை செலவில் விளையாடுவதை அரசாங்கம் உடன் நிறுத்த வேண்டுமெனவும் கிழக்கு மக்கள் குரல் அமைப்பின் ஊடக பேச்சாளரும் மக்கள் விடுதலை முன்னணியின் திருகோணமலை மாவட்ட அமைப்பாளருமான அருண் ஹேமச்சந்திர சுற்றிக்காட்டினார்.

## ஜிப்ஸிஸ் இசைக்குழுவின் தலைவர் சுனில்

சிகிச்சை பெற்ற சுனில் பெரேரான, கடந்த ஓரிரு நாட்களுக்கு முன்னர் குணமடைந்து வீடு திரும்பினர்.

தான் நன்கு குணமடைந்து வருவதாக கூறி இணையத்தில் புகைப்படம் ஒன்றை வெளியிட்டுள்ளார். எனினும அவரது நுரையீரலில் ஏற்பட்ட பாதிப்பு காரணமாக அவர் மீண்டும் வைத்தியசாலையில் அனுமதிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. வைத்தியசாலையின் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்ட அவர் நேற்று அதிகாலை இயற்கை எய்தியதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## அவசரகாலச் சட்டம் மேலதிக வாக்குகளால்

இதே வேளை நாடாளு மன்றில் மேற்கொள்ளப்பட்ட வாக்கெடுப்பிற்கு அமைவாக அத்தியாவசிய உணவுப்பொருட்களை விநியோகிப்பதற்கான அவசர கால நிலைமைகள் குறித்த ஒழுங்குவிதிகள் மீதான சட்டமூலம் 80 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அவசரகாலச் சட்டம் மீதான வாக்கெடுப்பிற்கு ஆதரவாக 132 வாக்குகளும் எதிராக 52 வாக்குகளும் அளிக்கப்பட்டிருந்தன.

இதேவேளை குறித்த வாக்கெடுப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை சேர்ந்த இராஜவரோதயம் சம்பந்தன், தர்மலிங்கம் சித்தார்த்தன், கோவிந்தன் கருணாகரம், விநோனோதராதலிங்கம் ஆகியோர் பங்கு கொள்ளவில்லை.

அத்தியாவசிய உணவுப்பொருள் விநியோகம் மற்றும் பதுக்குதலை தடுப்பதற்காக ஜனாதிபதியினால் பிரகடனப்படுத்தப்பட்ட அவசரகால ஒழுங்குவிதிகளை நிறைவேற்றுவதற்கான பிரேரணையே நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அவசரகால சட்டங்களை இரவோடு இரவாக

நிறைவேற்றுவதற்கான விசேட விவாதத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே எம்.ஏ.சுமந்திரன் இதனை தெரிவித்தார்.

ஜனாதிபதியால் அந்த அவசரகால சட்டங்கள் கொண்டுவரப்படும்போது நாடாளுமன்றத்தினால் அதனை கேள்விக்கு உட்படுத்த முடியாது என்பதையும் அவர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

அவசரகால விதிமுறைகளை நிறைவேற்றுவதற்கான ஜனாதிபதி வெளியிட்ட வர்த்தமானி அறிவித்தலில் கபடமான எண்ணம் இருப்பது புலப்படுவதாகவும் எம்.ஏ.சுமந்திரன் கூறினார். நாட்டில் விலைவாசி உயர்வை கட்டுப்படுத்த வேண்டும் என்றாலும் அவற்றினை இப்பிடியாக செய்வதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் அவர் குறிப்பிட்டார்.




## மட்டக்களப்பில் ஆண் ஒருவரின் சடலம் மீட்பு!!

நேற்று முன்தினம் இரவு உறக்கத்திற்கு சென்றிருந்த நிலையில் நேற்று காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தின் உத்தரவிற்கமைவாக சம்பவ இடத்திற்கு சென்ற திடீர் மரணவிசாரணை அதிகாரி சிதம்பரப்பிள்ளை ஜீவரெத்தினம் பிரேதத்தை பார்வையிட்ட பின்னர் பிரேதத்தை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்று பீ.சி.ஆர் பரிசோதனைக்குட்படுத்தும்படி பொலிஸாரிடம் உத்தரவிட்டுள்ளார். குறித்த சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் மேற்கொண்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## காணாமல் போனவர்களின் உறவினர்களை காணாமல் போனோர்

தகவல்கள் உள்ளிட்ட விடயங்களை அலுவலகம் கோரியுள்ளதால் தாம் அச்சமடைந்ததாகச் சர்வதேச ரீதியில் புகழ்பெற்ற மனித உரிமை ஆர்வலரும், காணாமல் போன தனது கணவருக்காக சுமார் 12 வருடங்களாகப் போராடி வருபவருமான சந்தியா எக்னலிகொட தெரிவித்துள்ளார்.

'காணாமல் போனோர் முறைப்பாடுகள் குறித்து மேலதிக விபரங்களைப் பெறுதல்'என்ற தலைப்பில் கடந்த ஆகஸ்ட் மாதம் 4ஆம் திகதி, காணாமல் போனோர் அலுவலகத்தின் தரவு முகாமைத்துவ பிரதானியான ஏ.என் நுவன் அனுப்பி வைத்த கடிதம் தனக்கு அதிர்ச்சியளித்ததாகச் சந்தியா எக்னெலிகொட தெரிவித்துள்ளார்.

'ஏனென்றால், பல வருடங்களுக்கு முன்னர் செய்யப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பில் நீங்கள் எடுத்த நடவடிக்கைகள் அல்லது விசாரணைகள் பற்றிய எந்த புதுப்பிப்பும் இல்லாத நிலையில், அமைப்புக்குத் தொடர்பில்லாத தனிப்பட்ட ஆவணங்களுக்கான உங்கள் வேண்டுகோள், நீதிக்குப் பதிலாக வன்முறை மற்றும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளதாக பாதிக்கப்பட்ட நபரான நான் உணர்கின்றேன். என அவர் அனுப்பியுள்ள பதில் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

2010 ஜனவரி 24ஆம் திகதி கடத்தப்பட்டுக் காணாமல் போன தனது கணவரும், ஊடகவியலாளருமான பிரகீத் எக்னலிகொடவை கண்டறிய மேற்கொண்ட முயற்சிகள் மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகள் எவ்வாறு நடத்தப்பட்டது என்பது குறித்துக் காணாமல் போனோர் அலுவலகத்தின் தரவு முகாமைத்துவ பிரதானிக்கு மிக நீண்ட விளக்கமளித்துள்ள சந்தியா எக்னலிகொட, தம்முடைய பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படுமா எனவும் சந்தேகம் வெளியிட்டுள்ளார்.

கடிதத்தில் அவரது சந்தேகங்களுக்கான நியாயமான காரணங்களையும் அவர் உள்ளடக்கியுள்ளார். தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவால் நியமிக்கப்பட்ட அரசியல் பழிவாங்கும் விசாரணை ஆணைக்குழுவின் தலைவராகச் செயற்பட்ட ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி உபாலி அபேரத்ன மற்றும் ஆணைக்குழுவின் ஏனைய உறுப்பினர்கள் பிரகீத் கடத்தல் தொடர்பான வழக்குகளை விசாரணைகளில் குற்றவாளிகளாகக் குறிப்பிடப்பட்ட இராணுவ புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளை விடுதலை செய்யுமாறு பரிந்துரைத்துள்ளதாக மனித உரிமை ஆர்வலர் சந்தியா எக்னெலிகொட சுட்டிக்காட்டியுள்ளார்.

'இந்த ஆணைக்குழு பாதிக்கப்பட்ட எனக்கு எவ்வித வாய்ப்பும் அளிக்காமல் அல்லது அழைப்பும் விடுக்காமல், நீதிமன்றத்தின் உத்தரவுகளைப் பொருட்படுத்தாமல், வழக்கின் சாட்சிகளை அச்சுறுத்தி ஒருதலைபட்சமாகச் செயற்படுகின்றது. என அவர் குறிப்பிட்டுள்ளார்.

குற்றவாளிகளை விடுவித்த ஆணைக்குழு, முறையான விசாரணையை நடத்தியதாகவும், பிரகீத் காணாமல் போனமை குறித்த உண்மையை வெளிக்கொண்டு வந்த அதிகாரிகளைப் பாராட்டுவதற்குப் பதிலாகத் தண்டித்துள்ளதாகக் குற்றஞ்சாட்டியுள்ள சந்தியா எக்னெலிகொட, இந்த தீர்மானமானது, இலங்கை குடிமகளாக அரசியல் யாப்பில் குறிப்பிடப்பட்டுள்ள சட்ட அமுலாக்கம் மற்றும் சட்டத்தின் ஆட்சி நியாயமாக இருக்க வேண்டு' என்ற தனது அடிப்படை அரசியலமைப்பு உரிமையை மீறுவதாக அமைந்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

மீறல்களுக்குத் தலைமை வகித்த ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி உபாலி அபேரத்ன தற்போது காணாமல் போனவர்கள் தொடர்பான அலுவலகத்தின் தலைவராகச் செயற்படுவதாகவும், இந்த அலுவலகத்தை ஒரு பக்கச்சார்பற்ற, சுயாதீனமான அமைப்பாக நம்பலாமா எனவும், அது பாதிக்கப்பட்டவருக்குத் தேவையான உளவியல் மற்றும் சமூக ஆதரவையும் பாதுகாப்பையும் வழங்குகிறதா? எனவும் காணாமல் போனவர்கள் தொடர்பான அலுவலகத்தில் தரவு பிரதானியிடம் கேள்வி எழுப்பியுள்ளார்.

2016ஆம் ஆண்டு நிலைமாறு கால நீதி பொறிமுறையின் முதல் படியாக நிறுவப்பட்ட காணாமல்போனோர் அலுவலகத்தின் தலைவர் உள்ளிட்ட ஆணையாளரின் நியமனமும், தற்போதைய அதிகாரிகள் நியமனம் மற்றும் அமைப்பு முற்றிலும் வேறுபட்டுள்ளதோடு, அலுவலகத்தில் சுயாதீனத்தன்மை குறித்த நம்பகத்தன்மை சிதைந்துள்ளது. சர்வதேச நிறுவனங்கள் மற்றும் நிறுவனங்களுடன் இணைந்து பணியாற்றக்கூடிய ஒரு சக்திவாய்ந்த நிறுவனம் காணாமல்போனோர் குறித்த அலுவலகம் என்பதை நினைவு கூர்ந்த சந்தியா எக்னெலிகொட, ஐஇீஇ மற்றும் க்மீீஙிஎஉஜஈ ஆகிய நிறுவனங்களுடன் நேரடியாகக் கையாளாமல் கடிதங்களைக் கோருவது மறைமுக அழுத்தமாகவே பார்ப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிரகீத் எக்னெலிகொட கடத்தப்பட்டுக் காணாமல்போனமை குறித்த மேலதிக தகவல்கள் பெற்றுக்கொள்ள வேண்டுமெனின் வழக்கு விசாரணைகளை அவதானிக்குமாறு சந்தியா எக்னெலிகொட காணாமல் போனோர் அலுவலகத்திற்கு அறிவித்துள்ளார்.

காணாமல் போனவர்களின் அலுவலகம் காணாமல் போன, காணாமல் போன குடும்பங்கள் அனுபவிக்கும் வலி மற்றும் அதிர்ச்சியை ஏற்றுக்கொள்கிறது. காணாமல் ஆக்கப்பட்டவர்கள் / காணாமல் போனவர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களுக்குப் பொறுப்புக்களை நிறைவேற்ற நாம் கடமைப்பட்டுள்ளோம், என அவர் காணாமல் போனவர்கள் தொடர்பான அலுவலகத்தின் முன்னாள் தலைவரான ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் தெரிவித்த விடயம் கடிதத்தின் நிறைவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## பொருட்கள் பதுக்கல்கள் தொடர்பில் மாநகர

காரசபை, விலை மதிப்பீட்டுத் திணைக்களம் என்பவற்றுடன் இணைந்து குழு சோதனை நடவடிக்கை ஒன்றினையும் திட்டமிட்டுள்ளோம் என மட்டக்களப்பு மாநகர முதல்வர் தி.சரவணபவன் தெரிவித்தார்.

நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அண்மையில், மாநகரசபையில் பலருக்குக் கொவிட் தொற்று ஏற்பட்டமையினால் மாநகர சேவைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தன. உண்மையில் எமது மண்டபத்தில் நிகழ்வொன்று இடம்பெற்றது. அதன் பின்னர் தான்; அதிக தொற்றாளர்கள் இனங் காணப்பட்டார்கள். அதனை நான் நடாத்த வேண்டாம் என ஆரம்பத்திலேயே சொல்லியிருந்தேன். ஆனால் அது செய்யப்பட்டது. அதன் பின்னர் தான் மாநகரசபையில் தொற்று ஆரம்பித்தது. சுமார் 35 பேர் வரையில் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டார்கள். தற்போது தொற்று நீக்கப்பட்டு எமது சேவைகள் தொடர்ந்து இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது. ஆனாலும் பொது மக்கள் மிக விழிப்பாக தங்கள் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

தற்போது சுகாதார சுற்று நிருபம் என்பது ஆளுங்கட்சியினரைப் பொருத்த வரையில் பின்பற்றப்படுகின்றனவா என்பது கேள்விக் குறியான விடயம். ஆளுங்கட்சியின் அரசியற் பிரமுகர்கள் பல நிகழ்வுகளைச் செய்கின்றார்கள். அதற்குரிய நடவடிக்கைகளைக் கொவிட் செயலணி தான் எடுக்க வேண்டும்.

தற்போது இடம்பெறுகின்ற பொருட்களின் பதுக்கல்கள் தொடர்பில் எமக்கு கிடைக்கும் முறைப்பாடுகளை உரிய இடங்களுக்குத் தெரியப்படுத்தி வருகின்றோம். மிக விரைவில் மாநகரசபையூடாகவும் திடீர் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட இருக்கின்றன. அது மட்டுமல்லாது, சுகாதாரப் பிரிவினர், நுகர்வோர் அதிகாரசபை, விலை மதிப்பீட்டுத் திணைக்களம் என்பவற்றுடன் இணைந்து குழு சோதனை நடவடிக்கை ஒன்றினையும் திட்டமிட்டுள்ளோம்.

தற்போதைய நிலையில் தொற்றில் இருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கு தடுப்பூசி ஒன்றே ஒரே ஒரு வழியாக இருக்கின்றது. அனைவரும் தவறாது தடுப்பூசி போட வேண்டும். தடுப்பூசியின் வகை தொடர்பில் பார்க்காமல் அந்த அந்த மாவட்டங்களுக்குக் கிடைக்கும் தடுப்பூசி வகைகளை செலுத்திக் கொள்ள வேண்டும். எனவே அனைவரும் இரண்டு தடுப்பூசிகளையும் தவறாது பெற்றுக் கொள்ள வேண்டும் என்று தெரிவித்தார்.

## கிழக்கு மாகாணத்தில் மூன்று மாத காலப்பகுதியில் 555 பேர்

கிழக்கு மாகாணத்தில் இதுவரை 43 ஆயிரத்திற்கு மேற்பட்ட நோயாளர்களும், 721 மரணங்களும் ஏற்பட்டுள்ளது. கடந்த மே, ஜுன், ஜுலை மாதங்களில் சராசரியாக 5 ஆயிரம் நோயாளர்கள் அடையாளம் காணப்பட்ட நிலையில் ஒக்ஸ்ட் மாதத்தில் மாத்திரம் 21 ஆயிரத்தி 800 நோயாளர்களைத் தாண்டியுள்ளது.

கடந்த மூன்று மாத காலங்களில் மே மாதம் 119 உம், ஜுன் மாதம் 132 உம், ஜுலை மாதம் 106 மரணங்கள் ஒக்கஸ்ட் மாதத்தில் 317 மரணங்கள் சடுதியாக உயர்வடைந்துள்ளது. இச்சடுதியான அதிகரிப்பு டெல்டா பிறள்வினால் ஏற்பட்டிருக்க வாய்ப்புண்டு. இந்த நிலையில் 15 இலட்சத்துக்கு அதிகமான தடுப்பு மருந்துகள் அரசாங்கத்தினால் எமக்கு கிடைக்கப்பெற்றுள்ளது.

இதில் 7 இலட்சத்தி 65 ஆயிரத்தி 447 தடுப்பு மருந்துகள் முதல் முறையாகவும், 4 இலட்சத்தி 85 ஆயிரம் தடுப்பு மருந்துகள் இரண்டாவது முறையாகவும் வழங்கப்பட்டுள்ளது. இதில் 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும், 18 – 30 வயதுக்குறப்பட்ட முன்நிலை கள உத்தியோகத்தர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள், ஆசிரியர்கள், தொழிற்சாலை ஊழியர்கள் ஆகியோர்களுக்கு இத்தடுப்பு மருந்து வழங்கப்பட்டுள்ளது. கிழக்கு மாகாணத்திலுள்ள பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைகளின் கீழ் வசித்து வருகின்ற பொதுமக்களுக்கு 90 சத வீதமான தடுப்பு மருந்துகள் முதலாவது முறையாக வழங்கப்பட்டுள்ளது. அம்பாறை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் 75 சத வீதத்துக்கு மேற்பட்ட தடுப்பு மருந்துகளும், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் 50 சத வீதத்துக்கு மேற்பட்ட தடுப்பு மருந்துகளும், மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் 60 சத வீதத்துக்கு மேற்பட்ட தடுப்பு மருந்துகளும், திருகோணமலை மாவட்டத்தில் 60 சத வீதத்துக்கு மேற்பட்ட தடுப்பு மருந்துகள் இரண்டாவது முறையாக பொதுமக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு 95 சத வீதமான இரண்டாவது தடுப்பு மருந்துகள் வழங்கப்பட்டுள்ளது. தடுப்பு நிலையங்களுக்கு வரமுடியாதவர்களுக்கு இராணுவத்தின் உதவியோடு சகல மாவட்டங்களிலும் உள்ள மருத்துவ பொது சுகாதார வைத்தியர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் இணைந்து வீடுகளுக்குச் சென்று வழங்கி வருகின்றனர். மேலும், அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட அஸ்ரா செனிக்கா என்ற தடுப்பு மருந்துகள் வழங்கும் விஷேட வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதன் அடுத்த கட்டமாக இவ்வாரம் கிடைக்க இருக்கின்ற தடுப்பு மருந்துகளையும், மிகுதியாக இருக்கின்ற மருந்துகளையும் பூரணமாக வழங்கி 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு இரண்டாவது கட்டமாக வழங்கி பூரணப்படுத்த வேண்டும் என்று சுகாதார அமைச்சினால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

மிக விரைவில் 20 வயதுக்கும், 30 வயதுக்குட்டவர்களுக்கு தேவையான அளவு தடுப்பு மருந்துகள் அரசாங்கத்தினால் வழங்க திட்டமிட்டுள்ளது. இச்செயற்திட்டம் மேல் மாகாணம், தென் மாகாணம் போன்ற மாகாணங்களில் நடைமுறைப்படுத்த தொடங்கியுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது என்றார்.

## விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தக் குற்ற விவகாரம்

நேற்று இடம்பெற்ற போது இராணுவமும், தமிழீழ விடுதலைப் புலிகளும் யுத்தக் குற்றங்களில் ஈடுபட்டனர் எனக் குறிப்பிடும் ஆவணத்தை ஐ.நா மனித உரிமைகள் பேரவைக்கு அனுப்ப இணக்கம் காணப்பட்டதாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன.

இதன்பின்னணியில் இலங்கை தமிழரசுக் கட்சி தமிழ் மக்களை தொடர்ந்தும் காட்டிக்கொடுத்து வருவதாக கூட்டமைப்பிற்கு எதிரான அரசியல் கட்சிகள் குற்றம் சுமத்தியிருந்தன.

இந்த நிலையில் விடுதலை புலிகளின் யுத்தக் குற்றங்களையும் விசாரிக்க வேண்டும் எனக் கோரும் ஆவணத்தை இலங்கை தமிழரசுக் கட்சி ஜெனிவாவிற்கு அனுப்பவில்லையென அக்கட்சியின் மூத்த உறுப்பினர் சி.வி.கே. சிவஞானம் தெரிவித்தார்.

## ஜனநாயக செயற்பாடுகளை நசுக்க ஜனாதிபதி நடவழிக்கையை

நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம் என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எ.சுமந்திரன் சபையில் தெரிவித்தார்.

உணவு விநியோகம் மற்றும் விலைவாசி அதிகரிப்பை அவசரகால நிலைமையை பிரகடனப்படுத்தித்தான் இதனை கட்டுப்படுத்த வேண்டும் என்ற எந்த கட்டாயமும் இல்லை எனவும் அவர் கூறினார்.

ஆனால் நாட்டை அவசரகால நிலைமையின் கீழ் கொண்டுவரும் உண்மையான நோக்கம் இப்படியான ஒரு அவசரகால நிலையை பிரகடனப்படுத்திவிட்டால், அதன் கீழான அவசர கால சட்ட விதிகளை ஜனாதிபதி இரவோடு இரவாக கொண்டுவர முடியும்.

அதனை இந்த பாராளுமன்றம் கேள்விக்கு உட்படுத்த முடியாது. இந்த பாராளுமன்றத்திற்கு கொடுக்கப்பட்டுள்ள கடமை மாதத்திற்கு மாதம் அவசரகால நிலைமை அனுமதிப்பதா? இல்லையா? என்ற கேள்வி மட்டும் தான்.

தற்போது வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி பிரசுரத்தில் சொல்லப்பட்டுள்ள விதத்திலே ஒரு கபடமான எண்ணம் இருப்பது தெளிவாக எமக்கு தெரிகின்றது.

நாட்டிலே விலைவாசி கட்டுப்படுத்த வேண்டும் என்பது உண்மை. ஆனால் இதனை இப்படியாக செய்வதை நாங்கள் வன்மையாக கண்டிக்கின்றோம் என்றார்.

# மக்களை ஒடுக்கவே அவசர கால சட்டம்

## இம்ரான் எம்.பி.குற்றச்சாட்டு



மக்களை ஒடுக்கவே அவசரகால சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது என பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் தெரிவித்தார்.அவசரகால சட்டம் தொடர்பான வாக்களிப்புக்கு பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து வெளியிட்ட அவர்,

இந்த அரசை ஆட்சிக்கு கொண்டுவர உதவிய அரசின் நண்பர்களாலேயே சீனி அரிசி உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களின் தட்டுபாடு ஏற்பட்டு விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இவர்களே சீனியை இலங்கைக்கு கொண்டுவந்தனர்.அரிசி விலையை தீர்மானிக்கின்றனர். இவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தால் மக்களுக்கு நிவாரணம் வழங்கமுடியும். ஆனால் நடவடிக்கை எடுக்கப்படுவதெல்லாம் அப்பாவி சில்லறை வியாபாரிகள் மீது.அத்தியாவசிய பொருட்களின் விலையை கட்டுப்படுத்த இந்த சட்டம் கொண்டுவரப்படவில்லை என இதில் இருந்தே தெளிவாகிறது.

குற்றவாளிகளை அருகில் வைத்துக்கொண்டு பொதுமக்களை அடக்கவே இந்த சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது.நாட்டில் ஏற்பட்டிருக்கும் பஞ்சத்தால் பொதுமக்கள் அனைவரும் வீதிக்கு இறங்குவார்கள் என்ற பயத்தில் இந்த சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது.

இதன்காரணமாகவே நாம் இச்சட்டத்தை நீக்கி அனர்த்த நிவாரண சட்டத்தின் மூலம் பெருந்தொற்றில் இருந்து நாட்டு மக்களை பாதுகாக்க நடவடிக்கை எடுக்குமாறு கூறுகிறோம் என தெரிவித்தார்.

# திருமலையில் அத்தியவசிய உணவுப்பொருட்களை தட்டுப்பாடின்றி வழங்க விசேட சுற்றிவளைப்பு மேற்கோள்ள நடவடிக்கை





(ரவ்பீக் பாயிஸ்)

திருகோணமலை மாவட்டத்தில் கொவிட் தடுப்பூசி ஏற்றல் நடவடிக்கைகள் எவ்வித தடங்கலுமின்றி சிறப்பாக நடைபெற்று வருவதாகவும் இதற்காக ஒத்துழைப்பு வழங்கிய சுகாதாரத்துறை, முப்படை, பொலிசார் மற்றும் தொடர்புற்ற அனைவருக்கும் நன்றிகளை தெரிவிப்பதாக மாவட்ட அரசாங்க அதிபர் சமன் தரிசன பாண்டிகோரள தெரிவித்தார்

மேலும் திருகோணமலை மாவட்டத்தில் அத்தியவசிய உணவுப்பொருட்களைதட்டுப்பாடின்றி மக்களுக்கு வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை உத்தியோகத்தர்கள் சுற்றி வளைப்புக்களை மேற்கொண்டு சட்டத்திற்கு முரணாக செயற்படும் வர்த்தர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தல் வழங்கியுள்ளதாகவும் இதன்போது மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

கொவிட் தொற்று அறிகுறியுடையவர்கள் தகவல்களை மறைக்காது செயற்படல் வேண்டும் எனவும் தகவலை மறைத்து செயற்பட்டு நோய்த்தாக்கம் கூடியபோது வைத்தியசாலையை நாடுவதால் உயிரிழப்புக்கள் அதிகம் ஏற்படக்கூடிய வாய்ப்பு இருப்பதாகவும் மாவட்டத்தில் ஏற்பட்ட உயிரிழப்புக்களுள் அதிகமானவை அவ்வாறான தன்மையால் ஏற்பட்டதாகவும் எனவே மக்கள் இவ்விடயத்தில் பொறுப்புடன் செயற்படல் வேண்டும் எனவும் இதன்போது திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் டி.ஜி.எம்.கொஸ்தா தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் கொவிட் மரணங்கள் தொடர்பான உடலங்களை தாமதியாது தகனம்/ அடக்கம் செய்தல் உட்பட பல விடயங்களும் இதன்போது கலந்துரையாடப்பட்டதுடன் திருகோணமலை மாவட்ட கொவிட் செயலணிக்குழுக் கூட்டத்தில் மேலதிக அரசாங்க அதிபர் ஜே.எஸ்.அருள்ராஜ்,முப்படை, பொலிஸ் அதிகாரிகள்,பிரதேச செயலாளர்கள் மற்றும் துறைசார் அதிகாரிகளும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# விறகு சேகரிக்க சென்ற பெண் மாயம்

(தலவாக்கலை பி.கேதீஸ்)

நுவரெலியா கிக்கிலியமான வனப்பகுதியில் விறகு சேகரிக்க தனது தாயுடன் சென்ற 25 வயது பெண் காணாமல் போயுள்ளதாக நுவரெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

நுவரெலியா தோட்ட கீழ் பிரிவில் வசிக்கும் ஜெயபாலன் கவிபுகனலானி (25) என்ற திருமணமாகாத பெண்ணே இவ்வாறு காணாமல் போயுள்ளார்.

காணாமல் போன தனது மகள் தன்னுடன் 5.9.2021 காலை நுவரெலியா கிக்கிலியமான வனப்பகுதிக்கு விறகு சேகரிக்கச் வந்ததாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையின் போது குறித்த பெண்ணின் தாயார் தெரிவித்துள்ளார். தன்னோடு விறகு சேகரித்துக்கொண்டிருந்த மகள் அவ்விடத்திலிருந்து எவ்வாறு காணாமல் போனார் என்பது தெரியவில்லை என்றும் சில மணிநேரம் அவ்விடத்தில் கூக்குரல் இட்டு மகளை தேடியதாகவும் அவள் அங்கு இல்லை என்றும் தாய் பொலிஸாரிடம் மேலும் தெரிவித்துள்ளார்.

காணாமல் போன பெண் மனநலம் பாதிக்கப்பட்ட பெண் என்றும் அவரைத் தேடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். மேலதிக விசாரணைகளை நுவரெலியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஆலையடிவேம்பில் 30 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கான முதலாம் மற்றும் இரண்டாம் தடுப்பூசி ஏற்றும் பணி ஆரம்பம்





(வி.சுகிர்தகுமார்)

ஆலையடிவேம்பில் 30 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கான முதலாம் மற்றும் இரண்டாம் தடுப்பூசி ஏற்றலின் தொடர் சேவை நேற்று (06)முதல் ஆரம்பமாவதாக ஆலையடிவேம்பு பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆலையடிவேம்பில் பிரதேசத்தில் இதுவரை 12500 இற்கும் மேற்பட்டவர்கள் முதலாவது தடுப்பூசியினை பெற்றுக்கொண்டுள்ள நிலையில் சுமார் 8000 ஆயிரம் வரையிலான மக்கள் இரண்டாவது தடுப்பூசியினை ஏற்றிக் கொண்டுள்ளனர்.

இந்நிலையில் இரண்டாம் தடுப்பூசி ஏற்றலின் தொடர் சேவை நாளை முதல் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஜி.சுகுணின் மேற்பார்வையில் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி திருமதி எஸ்.அகிலன் தலைமையில் ஆரம்பமாகவுள்ளது. இதன் பிரகாரம் நாளை 07ஆம் திகதி காலை 8 மணிமுதல் 1 மணிவரை கண்ணகிகிராமம் 12 ஆகிய பிரிவு மக்களுக்கு கண்ணகிகிராமம் கண்ணகி வித்தியாலயத்திலும் அது போல் இதுவரை தடுப்பூசி பெற்றுக்கொள்ளாத ஏனைய பிரிவு மக்களுக்கு காலை 8 மணிமுதல் 1 மணிவரை அக்கரைப்பற்று ஸ்ரீக இராமகிருஸ்ண தேசிய பாடசாலையிலும் தடுப்பூசி வழங்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

இதேநேரம் நாளை மறுதினம் 08ஆம் திகதி காலை 8 மணிமுதல் 1 மணிவரை இதுவரை தடுப்பூசி பெற்றுக்கொள்ளாத ஏனைய பிரிவுகளுக்கு ஆலையடிவேம்பு திருநாவுக்கரவு வித்தியாலயத்திலும் , அக்கரைப்பற்று ஸ்ரீ இராமகிருஸ்ண தேசிய பாடசாலையிலும் வழங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆகவே இச்சந்தர்ப்பத்தை தவறாது தடுப்பூசி ஒன்றினையும் பெற்றுக்கொள்ளாதவர்கள் பயன்படுத்தி தடுப்பூசியினை பெற்றுக்கொள்வதுடன் கொரோனா தொற்று நோயிலிருந்து அனைவரும் விடுபட வழி சமைக்குமாறு பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தினால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

# மன்னாரில் மொத்தமாக கோரோனா தொற்றாளர்களாக 1773 நபர்கள் உறுதி செய்யப்பட்டுள்ளனர்

(வாஸ் கூஞ்ஞ)

மன்னாரில் மேற்கொள்ளப்பட்ட பி.சீ.ஆர். மற்றும் அன்ரிஜன் பரிசோதனைகளில் ஞாயிற்றுக் கிழமை (05.09.2021) 05 நபர்களுக்கு கொரோனா தொற்று என உறுதி செய்யப்பட்டுள்ளதாக மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் த.வினோதன் தனது நாளாந்த பதிவில் தெரிவித்துள்ளார். இதனால் மன்னாரில் கொரோனா தொற்றாளர்கள் 1773 ஆக உயர்ந்துள்ளது.

மன்னார் பிராந்திய சுகாதார சேவை திணைக்களத்துக்கு ஞாயிற்றுக் கிழமை (05.09.2021) கிடைக்கப்பெற்ற தகவலில் மன்னார் மாவட்டத்தில் ஏற்கனவே எடுக்கப்பட்ட பி.சீ.ஆர். மற்றும் அன்ரிஜன் பரிசோதானைகளில் மேலும் 05 நபர்களுக்கு கொரோனா தொற்று என உறுதி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே எடுக்கப்பட்ட பி.சீ.ஆர். பரிசோதனையில் மன்னார் பொது வைத்தியசாலையில் 03 பேருக்கும், கடற்படையினர் ஒருவருக்கும் மற்றும் மன்னார் பொது வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜன் பரிசோதனையில் ஒருவருக்கும் மொதத்தமாக 05 நபர்கள் ஞாயிற்றுக் கிழமை (05) இவ் தொற்று நோய்க்கு உள்ளாகியிருப்பதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தனது பதிவில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் மன்னார் மாவட்டத்தில் இதுவரை 1773 பேர் கொரோனா தொற்றாளர்களாக இனம் காணப்பட்டுள்ளதாகவும், இவ் வருடம் மட்டும் (2021) மொத்தமாக 1756 பேர் கொரோனா தொற்றாளர்களாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளனர்.

இவ் நடப்பு மாதமாகிய செப்டம்பர் மாதத்தில் 5ந் திகதி வரை 89 பேர் கொரோனா தொற்றாளர்களாக இனம் காணப்பட்டுள்ளனர் எனவும்

இவ் வருடம் (2021) மன்னார் மாவட்டத்தில் சமூக மட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில் 1321 நபர்களும், மன்னார் பொது வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில் 435 பேருமே இவ் நோய் தொற்றாளர்களாக உறுதிப்படுத்தப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த மாதம் (செப்டம்பர்) இதுவரை 254 பி.சீ.ஆர். பரிசோதனைகளும் மன்னார் மாவட்டத்தில் இதுவரைக்கும் மொத்தமாக 28014 பி.சீ.ஆர். பரிசோதனைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும்,

இதுவரைக்கும் கொரோனா காரணமாக 20 நபர்களே மரணத்தை தழுவிக் கொண்டதாகவும் அவர் தனது நாளாந்த பதிவில் இவ்வாறு அறிக்கையிட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அத்துடன் இதுவரைக்கும் கொரோனா முதலாவது தடுப்பூசிகள் 62543 பேருக்கும், இரண்டாவது தடுப்பூசிகள் 55384 நபர்களுக்கும் ஏற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மட்டு ஊடக அமையத்தில் ஊடகவியலாளர் ஞானப்பிரகாசம் பிரகாஸிற்கு அஞ்சலி






(மட்டக்களப்பு விசேட நிருபர்)

கோவிட் தொற்றுக் காரணமாக அண்மையில் இறந்த ஊடகவியலாளர் ஞானப்பிரகாசம் பிரகாஸ் அவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு நேற்று (06) பி.ப 3.00 மணிக்குக் மட்டக்களப்பு ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்றுள்ளது.

மட்டகளப்பு ஊடக அமையத்தில் நடைபெற்ற அஞ்சலி நிகழ்வில் ஊடகவியலாளர் அமரர் ஞானப்பிரகாசம் பிரகாஸின் திருவுருவப்படத்திற்கு விளக்கேற்றி மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது.

இதில் மட்டக்களப்பு ஊடக அமையத்தின் தலைவர் வா.கிருஷ்ணகுமார் மற்றும் ஊடகவியலாளர்கள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தியுள்ளனர்.


Sj
SRI JEWELLERY
Swiss, Zürich இல் மிகப்
பிரமாண்டமாய் புதுப்பொலிவுடன்
பரம்பரை பரம்பரையாக
நகைத் தொழிலில்
அனுபவம் பெற்றவர்கள் நாங்கள்
வைர தாலி கொடி, மோதிரம், வளையல்
பெயர் பெண்டன், மற்றும் அனைத்து
நகைகளும் செய்து தரப்படும்.
திருத்த வேலைகளும் உடனுக்குடன்
செய்து தரப்படும்.
+41 43 366 80 09 / +41 79 898 51 01
Mattengasse 17, 8005, Zürich, Swiss
info@srijewellery.ch


Sikaram
துரிதபணமாற்றுச்சேவை
Sikaram INTL Gmbh
Heinrich Strasse 120, 8005 Zürich
sikaramgmbh@gmail.com / www.sikaram.com
Tel : 044 2410241
Fax : 044 2410245


Prasath Coiffeur
Öffnungszeiten
Mo -Fr 10.00-19.00
Sa 09.00-18.00
Heinrichstrasse 120, 8005 Zürich.
NAT:076 565 64 57


Allegrotto Pizza Kurier
Allegrotto Pizza Kurier
Bederstrasse 102, 8002 Zürich.
044 280 40 30 | 076 326 91 18
Toll free 0844 80 40 30
pizzakingzurich@gmail.com.
www.allegrotto.ch
Seela Food Gastro AG
044 222 22 50
076 326 91 18
info@seelagastro.ch
www.seelagastro.ch
Züricherstrasse 15
8400 Winterthur.


SwissLife
Select
சுவிசில் சொந்த வீடு
வாங்க விரும்பும் உறவுகளே,
அவதானமாகச் செயற்படுங்கள்.
உங்கள் கடனுக்கான வட்டி வீதம்
எப்போதும் அதிகரிக்க கூடும்.
எனவே, சரியான வங்கியையும்,
வட்டி வீதத்தையும்
தெரிந்து கொள்ளுங்கள்.
உங்கள் வாழ்வின் சகல
அம்சங்களிலும் உங்களோடு
கரங் கோர்க்கும்
ஒரே ஒரு நிறுவனம்...
மருத்துவ காப்புறுதி
வாகனக் காப்புறுதி
குழந்தைகளுக்கான
காப்புறுதி
ஆயுட் காப்புறுதி
சட்டக் காப்புறுதி
Herr Krishnasamy
THILEEPAN
Dipl.Finanzberater IAF
Cicero : 15787
FIDLEG : KT 47598
Swiss Life Select AG
Zweigniederlassug Bern-Köniz
Sägerstrasse 79, 3098 Köniz.
Email : krishnasamy.thileepan@swisslife-select.ch Web : www.swisslife-select.ch
Telefon : 031 915 00 50 Telefax : 031 915 00 60 Handy : 079 889 60 65


Aaran Ayurveda
& Wellness Massage
Stampfenbachstrasse-24, 8001 Zurich, Tel: 043 243 60 66
Mobile: 079 940 1510 | www.aaranayurveda.ch
Krankenkasse Anerkannt


5ம், 6ம் ஆண்டு மாணவர்களுக்கான
புதிய கணினி வகுப்புக்கள் ஆரம்பம்
எங்கே? சூரிச் மாநகரில் கணினித்துறையில்
நூற்றுக்கணக்கான மாணவர்களை உருவாக்கிய
Online Tech Network
நிறுவனத்தில்
ECDL
Office
Windows 10
தொடர்புகளுக்கு
MANOJ MASTER
Online Tech Network
Militärstrasse 84, 8004 Zürich
043 811 80 90, 076 524 80 59

# மக்களாட்சிக்கு முரணானதும் சர்வாதிகார ஆட்சிக்கு சாதகமானதுமான ஏற்பாடே அவசரகாலச் சட்டம்

(துறையூர் சஞ்சயன்)

மக்களாட்சிக்கு முரணானதும் சர்வாதிகார ஆட்சிக்குச் சாதகமானதுமான ஏற்பாடே அவசரகாலச் சட்டமாகும். இலங்கையின் 73 ஆண்டு கால அடிப்படைவாத ஆட்சியில் 444 தடவைகள் அவசர காலச் சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டு. மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஞா.ஸ்ரீநேசன் தெரிவித்தார்.

உணவுத்தட்டுப்பாடு தொடர்பிலான அவசர கால நிலைப் பிரகடனம் தொடர்பாக வினவியபோதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

73 ஆண்டுகளையும் மாதங்களாக மாற்றி 444 ஆல் வகுத்துப் பார்க்குமிடத்து சராசரியாக இரண்டு மாதங்களுக்கு ஒரு தடவை அவசரகாலச் சட்டம் பிரயோகிக்கப்பட்டுள்ளதாக பொருள்கோடல் செய்ய முடியும். அப்படியென்றால் அடிப்படைவாத ஆட்சியினை முன்னெடுப்பதற்கு அவசரகாலச் சட்டங்களின் பிரயோகங்கள் உதவியுள்ளன.

அவசரகாலச் சட்டம் என்பது மனித உரிமைகளைக் கட்டுப்படுத்துகின்ற மட்டுப்படுத்துகின்ற இராணுவத்திற்கு அதிகாரங்களை வழங்கக்கூடிய சட்டவிதிகளைக் கொண்டுள்ள செயற்பாடாகும்.

இந்தச் சட்டத்தின் கீழ் இராணுவத்திற்கும் மக்களைக் கைது செய்வதற்கான அதிகாரம் உண்டு. வழக்கமாகப் பொலிசாருக்குக் காணப்பட்ட கைது செய்கின்ற அதிகாரம் இராணுவத்திற்கும் கிடைக்கின்றது. மேலும் மக்கள் ஆர்ப்பாட்டங்களையோ ஊர்வலங்களையோ ஜனநாயக வழி முறையிலும் செய்ய முடியாது. அத்துடன் கைது செய்யப்பட்டவர்கள் தொடர்பான விசாரணைகளைத் துரிதமாகச் செய்ய வேண்டியதும் இல்லை. அதே வேளை, ஜனாதிபதி அவசர காலச் சட்டத்தின் கீழ் தனது அதிகாரங்களை மேலும் வலுவாகப் பிரயோகிப்பதற்கு வசதிகள் உண்டு. எனவே, இந்த வேளையில் எதிர்க்கட்சியினர், சாதாரண பொதுமக்கள் மேற்கொள்ளுகின்ற ஆட்சியாளர்களுக்கு எதிரான செயற்பாடுகள் அதிகார இரும்புக் கரம் கொண்டு கடுமையாக அடக்கி ஒடுக்கப்படுவதற்கு வாய்ப்புகள் உண்டு. இதனால் எதிர்க்கட்சியினர் பொதுமக்கள் மிகவும் அவதானமாக நடந்து கொள்ள வேண்டும். ஆட்சியாளர்களுக்கு எதிரான கிளர்ச்சிகள் 1971 , 1988, 1989 காலப் பகுதிகளில் ஜே.வி.பி.யினரால் மேற்கொள்ளப்பட்டது. அதேவேளை ஜனநாயக வழிமுறைகளால் தமிழர்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கான தமிழரக்கட்சியினதும் பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணியினதுமான அறவழிப் போராட்டம் 1949 முதல் 1979 வரை கடந்த 30 ஆண்டுகள் நடைபெற்றன.

ஜனநாயக வழி முறைகள் அனைத்தும் ஆட்சியாளர்களால் நிராகரிக்கப்பட்டதாலும், ஏமாற்றப்பட்டதாலும் பின்னர் ஆயுத வழிப் போராட்டம் தமிழ் இளைஞர்களால் 30 ஆண்டுகள் மேற்கொள்ளப்பட்டது. இதனை அரசியல் வழிமுறைகளால் தீர்ப்பதை விடுத்து அடிப்படை வாதமானது அவசரகாலச்சட்டத்தினை மாதமொரு முறை பாராளுமன்றத்தில் மூலமாக நீடித்து அடக்குமுறையினையும் ஒடுக்குமுறையினையும் அடிப்படைவாத ஆட்சியாளர்கள் கையாண்டனர். அப்படிப் பார்க்கின்றபோது எமது நாட்டில் 444 தடவைகள் அவசரகாலச் சட்டம் பிரயோகிக்கப்பட்டுள்ளது. ஆயின் இந்த நிலைமை ஜனநாயகம் சட்டவாட்சி, மனித வுரிமைகள் என்பவற்றுக்கு விடுக்கப்பட்ட சவால்களாகவே பார்க்க முடியும்.

இப்படியான ஆட்சி முறைகளால் நாட்டில் சமாதானமோ, தேசிய ஐக்கியமோ, அபிவிருத்தியோ ஏற்படவில்லை என்பதுதான் கசப்பான உண்மையாகும். அரசியல் பிரச்சினைகளுக்குக் காலா காலத்தில் அரசியல் தீர்வு காணப்பட்டிருக்குமாயின் அவசரகாலச் சட்டச் செயற்பாடுகள் தேவைப்பட்டிருக்காது. உயிரழிவுகள், சொத்துகள் அழிவுகள், மனித உரிமை அவலங்கள் ஏற்பட்டிருக்காது.

உள்நாட்டு நெருக்கடிக்கள் சர்வதேச நெருக்கடிகள் ஏற்பட்டிருக்காது.

கடந்த காலப் படிப்பினைகளைக் கற்றுக்கொண்டு தவறுகள், தப்புகளைத் திருத்திக் கொள்ளாதவரை தேசிய இனப் பிரச்சினைக்கு நியாயமான அரசியல் தீர்வு எட்டப்படாத வரை கடந்த காலம், நிகழ் காலம் போன்று எதிர்காலமும் மக்களுக்கு நம்பிக்கையற்றதாகவே அமையும். அடிப்படைவாதம், அவசர காலச் சட்டங்களே நாட்டை ஆட்சி செய்யும். நாட்டில் ஐக்கியமோ அபிவிருத்தியோ ஏற்படாது. ஆட்சி செய்யும் கட்சிகள், பெயர்கள், நிறங்கள் மாற்றம் அடையலாம் ஆனால் அடிப்படை வாதந்தான் ஆட்சி செய்யும். அதற்கு அவசரகாலச் சட்டங்கள் அனுசரணை வழங்கும். வாக்களிக்கும் மக்களின் மனங்களில் மாற்றம் ஏற்படாதவரை அதுவும் குறிப்பாக 74 வீதமான சிங்கள மக்களின் மனங்கள் மாறாதவரை எதிர்காலமும் எமக்கு நம்பிக்கை அளிக்கப் போவதில்லை. கொரோனா தொற்றுக்களுக்குள் வாழப்பழகிக் கொள்வதுபோல் அவசர காலச் சட்டங்களுக்கும் மக்கள் பழகிக்கொள்ள வேண்டும். இப்படித்தான் செல்கிறது எமது மக்களின் ஜனாயகம்.



# பதிவு செய்யாத மீன் வியாபாரிகளுக்கு அனுமதியில்லை: கல்முனை மாநகர சபை அறிவிப்பு

(அஸ்லம் எஸ்.மௌலானா)

கல்முனை மாநகர சபை எல்லையினுள் மீன் விற்பனையில் ஈடுபடுவோரும் வாடிகளை நடத்துவோரும் மாநகர சபையில் தம்மைப் பதிவு செய்து, அனுமதி பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விடயம் குறித்து மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தெரிவிக்கையில்;

1956ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க உள்ளூராட்சி அதிகார சபைகள் நியமத்துணை விதிகள் சட்டத்தின் பாகம் 21 மற்றும் 56 இன் கீழ் கல்முனை மாநகர சபை எல்லையினுள் மீன் வியாபாரத்தை ஒழுங்குபடுத்தும் பொருட்டு, இப்பதிவு நடவடிக்கையை முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் சந்தை அல்லது ஏதாவது ஓரிடத்தில் மீன் வியாபாரம் செய்பவர்களும் வீதிகளில் நடமாடும் மீன் விற்பனையாளர்களும் மீன் வாடிகளை நடத்துவோரும் எதிர்வரும் 2021-09-15ஆம் திகதிக்கு முன்னர் மாநகர சபையில் தம்மைப் பதிவு செய்து, அனுமதிப் பத்திரம் மற்றும் அடையாள அட்டை என்பவற்றை பெற்றுக் கொள்ள வேண்டும்.

அத்துடன் மேற்படி நியமத்துணை விதிகளில் கூறப்பட்டவாறு மீன் வியாபாரிகள் அனைவரும் சுகாதார நடைமுறைகளை கண்டிப்பாக பின்பற்ற வேண்டும்.

மாநகர பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள், வருமானப் பரிசோதகர்கள் மற்றும் பொலிஸார் இதனை மேற்பார்வை செய்து, அவ்வப்போது உரிய நடவடிக்கைகளை முன்னெடுப்பார்கள்.

மாநகரசபையின் அனுமதி பெறாதவர்களும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாதோரும் மாநகர சபை எல்லையினுள் மீன் வியாபாரத்தில் ஈடுபடவோ, வாடிகளை நடத்தவோ அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

இதனை மீறிச் செயற்படுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பதற்கு கல்முனை மாநகர சபை தீர்மானித்திருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# அரச உடமையாக்கப்பட்ட அத்தியாவசிய பொருட்களை கட்டுப்பாட்டு விலையில் மக்களுக்கு வழங்க நடவடிக்கை



(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

அத்தியாவசியப் பொருட்களை பதுக்கி வைத்திருந்தவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டு அரசுடமையாக்கப்பட்ட சீனி, அரிசி, பால்மா, நெல் போன்ற பொருட்களை மக்களுக்கு கட்டுப்பாட்டு விலையில் வழங்க அரசு உடனடி நடவடிக்கை எடுத்துள்ளது.

அண்மையில் அத்தியாவசியப் பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக கான்பித்து பதுக்கி வைத்திருந்த பொருட்களை நுகர்வோர் அதிகார சபை கைப்பற்றி அரசுடமையாக்கியிருந்தது.

இவ்வாறு அரசுடமையாக்கப்பட்ட பொருட்களை உடனடியாக மக்களுக்கு சென்றடையச் செய்ய அரசு மேற்கொண்ட தீர்மானத்திற்கமையவாக உணவு ஆணையாளர் திணைக்களம் மொத்தவியாபாரிகள் மூலமாக கட்டுப்பாட்டு விலையில் விற்பனை செய்ய நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கமைவாக இப்பொருட்களை நாடளாவிய ரீதியில் மொத்த வியாபாரிகள் கொள்வனவு செய்து கட்டுப்பாட்டு விலையில் விற்பனை செய்ய முடியும். இதற்காக மொத்த வியாபாரிகள் உணவு ஆணையாளர் திணைக்களத்தினை 011 3681797 அல்லது 0769 906 906 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்வதன் மூலம் மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொண்டு மக்களுக்கான உடணடி வியாபார தேவைகளை பூர்த்தி செய்யுமாறு உணவு ஆணையாளர் திருமதி. கிருஷ்னமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இதற்கிணங்க மட்டக்களப்பு மாவட்ட மொத்த வியாபரிகளும் இவ்விடயத்தில் அக்கரையெடுத்து இம்மாவட்ட மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் தட்டுப்பாடின்றி கட்டுப்பாட்டு விலையில் விற்பனை செய்ய முன்வருமாறு மாவட்ட அரசாங்க அதிபர் கே. கருணாகரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைப்பு

(இஃஜாஸ் ஏ பரீட்)

அவுஸ்ரேலியாவில் இயங்கும் மனிதாபிமான நிறுவனமான வன்னி ஹோப் நிறுவனத்தின் அனுசரணையில் திருகோணமலை மக்கள் சேவை மன்றத்தினால் திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலத்திற்குட்பட்ட விளாங்குளம் மற்றும் அதன் அதண்டிய மீள்குடியேற்ற கிராமங்களில் உள்ள குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் மன்றத்தின் தலைவர் எம். ரீ. எம். பாரிசினால் ஞாயிற்றுக்கிழமை வழங்கி வைக்கப்பட்டது.

கொவிட்-19 பரவல் காரணமாக பிரயாணக் கட்டுப்பாடு மற்றும் ஊரடங்கு நாடளாவிய ரீதியில் அரசாங்கத்தினால் அமுல்படுத்தப்பட்ட நிலையில் அன்றாடம் கூலித் தொழில் செய்துவரும் வருமானம் பாதிக்கப்பட்ட சுமார் 130 குடும்பங்களுக்கு வன்னி ஹோப் நிறுவனத்தின் அவசரகால நிவாரணப்பணி திட்டத்தின் கீழ் மேற்படி அத்தியாவசிய உலர் உணவுப் பொதிகள் வழங்கிவைக்கப்பட்டது.

இந்த இடர்கால நிவாரணப் பணிகளை வழங்கிய வன்னி ஹோப் அவுஸ்ரேலிய நிறுவனத்திற்கும் நிதி உதவி வழங்கிய திருமதி வாசுகி மகாதேவன் மற்றும் கணகசிங்கம் குடும்பத்தாருக்கு ஊர் மக்கள் நன்றியையும் பாராட்டையும் தெரிவித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# தேர்தல் வாக்குறுதிக்கமைய கோமரங்கடவெல திம்பிரிவெவ வீதி கொங்கிறீட் வீதியாக புனரமைப்பு

(இஃஜாஸ் ஏ பரீட்)

திருகோணமலை மாவட்டத்தில் கோமரங்கடவெல திம்பிரிவெவ வீதி கொங்கிறீட் வீதியாக புனரமைப்பு பணிகள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.



இதனால் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவருமான கபில நுவான் அத்துக்கோரள ஆரம்பித்து வைத்தார்.

இந்த வீதி மிகவும் பள்ளமும் , படு குழியுமாகவும் பழுதடைந்து மழை காலங்களில் சேரும், சகதியாகவும் காணப்பட்டதால், மக்கள் நடக்கக்கூட முடியாது மிகவும் கஷ்டப்பட்டனர். இவ் வீதியில் 20 இதற்கு மேற்பட்ட விபத்துகளும் இடம் பெற்றுள்ளன.

இது குறித்து இம் மக்கள் கடந்த நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்பு இப்பகுதியில் இடம் பெற்ற தேர்தல் கூட்டமொன்றில் மக்கள் முன் வைத்த கோரிக்கைகிணங்க இந்த வீதி கொங்கிறீட் வீதியாக புனரமைக்கப்படுகிறது.

இதனால் இப்பிரதேச மக்கள் பாராளுமன்ற உறுப்பினர் கபில நுவான் அத்துக்கோரளவுக்கு தமது நன்றியைத் தெரிவித்துள்ளனர்.

# கோவிட் 19 சிகிச்சை நிலைய கட்டிடம் திறப்பு





(க.கிஷாந்தன்)

அட்டன் டிக்கோயா ஆதார வைத்தியசாலையில் புதிதாக அமைக்கப்பட்ட கொவிட் 19 சிகிச்சை நிலைய கட்டிடம் நேற்று முன்தினம் (05) வைத்தியசாலை நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது.

பெருந்தோட்ட உட்கட்டமைப்பு, சமூக அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு மற்றும் ஏ.எச்.எஸ் தனியார் நிறுவனம் ஆகியன இணைந்து இந்த கொவிட் கட்டிடத்தை அமைத்துள்ளன.

8 மில்லியன் ரூபா செலவில் இந்த கட்டிட கட்டமைப்பு அமைக்கப்பட்டுள்ளது.

இந்த கட்டிட தொகுதியில், வைத்தியர்கள், தாதியர்களுக்கான ஓய்வறைகள், நோயார்களுக்கான உணவு விடுதி, 28 கட்டில்கள் உள்ளன

டிக்கோயா மாவட்ட வைத்திய சாலையில் உள்ள கொவிட் 19 தொற்றார் சிகிச்சை வார்ட்டில் இட நெருக்கடி காரணமாக வைத்தியசாலை நிர்வாகத்தினரால் முன்வைத்த வேண்டுகோளுக்கிணங்க ஏ.எச்.எஸ் தனியார் நிறுவனால் 80 லட்சம் ருபாய் செலவில் இந்த சிகிச்சை நிலைய புதிய கட்டிடம் அமைத்து கையளிக்கப்பட்டது.

சுகாதார விதிமுறைகளோடு இடம்பெற்ற இந் நிகழ்வில் ஏ.எச்.எஸ் தனியார் நிறுவனம் மற்றும் டிக்கோயா மாவட்ட ஆதார வைத்தியசாலை நிர்வாகத்தினரும் கலந்து கொண்டனர்.

# திருமலையில் சீனி கொள்வனவிற்காக அலைமோதும் பொதுமக்கள்



(ரவ்பீக் பாயிஸ்)

நாட்டில் ஊரடங்கு சட்டம் அமல்படுத்தப்பட்டுள்ள நிலையில் திருகோணமலையில் சீனி கொள்வனவு செய்வதற்காக மக்கள் வரிசையில் காத்திருந்து கொள்வனவு செய்வதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் அரசாங்கத்தினால் சீனியின் விலை குறைக்கப்பட்டு லங்கா சதொச நிறுவனத்தில் ரூபா 120 க்கு சீனியினை கொள்வனவு செய்ய முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் திருகோணமலை நகரில் உள்ள லங்கா சதோச நிறுவனத்தில் பெருமளவான மக்கள் சுட்டெரிக்கும் வெயிலில் நீண்ட வரிசையில் காத்திருந்து சீனி கொள்வனவு செய்வதை எம்மால் அவதானிக்க கூடியதாக இருந்தது.

இவ்வாறு வெயிலில் காத்திருந்து கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர் ஒருவருக்கு இரண்டு கிலோகிராம் வெள்ளை சீனியினை மாத்திரமே வழங்கப்படுவதாக பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மேலும் திருகோணமலை நகரில் திருகோணமலை பலநோக்கு கூட்டுறவு சங்க கிளைகளில் சீனி கொள்வனவிற்க்காக வரிசையில் காத்திருப்பதை காணமுடிந்தது இருந்த போதிலும் திருகோணமலை நகரில் ஒரு கிலோகிராம் சீனி மாத்திரம் வழங்கப்படுவதாகவும் அவ்வாறு விற்பனை செய்யப்படும் சீனி நிபந்தனைகளுடனே விற்பனை செய்யப்படுவதாகவும் மக்கள் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்

அரசாங்கத்தினால் போதுமான அளவு சீனி இருப்பு இருப்பதாக அறிவிக்கப்பட்ட போதிலும் இவ்வாறு காலை முதல் மாலை வரை நீண்ட வரிசையில் வெயிலில் காத்திருந்து ஒரு கிலோ கிராம் சீனியை மாத்திரம் கொள்வனவு செய்வது மக்களை ஏமாற்றி நாடகம் ஆடுவதாகவும் புத்திஜீவிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.




# கொரோன சிகிச்சை நிலையம் அமைக்க திருச்சபைக்கு சொந்தமான உடைமைகளை பயன்படுத்துமாறு அருட்தந்தை சகாயநாதன் தெரிவிப்பு



(ரக்ஸனா)

மனிதன் மரித்தாலும் மனிதநேயம் மரித்து போய்விடக்கூடாது என்பதற்கமைய இயேசுசபையின் அருட்தந்தை சகாயநாதன் நாடாளுமன்ற உறுப்பினர் சிவநேசதுரை சந்திரகாந்தன் அவர்களுக்கு கோரிக்கை ஒன்றை விடுத்திருந்தார். அதில் தற்போழுது நாட்டில் அதிகரித்துவரும் கொரோன நோய்த்தாக்கத்தினால் பாதிக்கப்படும் நோயாளிகளுக்கான சிகிச்சை நிலையங்களை அமைப்பதற்காக கல்குடாவில் காணப்படும் தமது தியானபீடம், ஒன்றுகூடல் மண்டபம் மற்றும் மூலிகை வைத்திய நிலையம் போன்றவற்றை பயன்படுத்துமாறு கோரியிருந்தார்.

அதனடிப்படையில் ஞாயிற்றுக்கிழமை(05) அவ்விடத்திற்க்கு விஜயம் செய்த நாடாளுமன்ற உறுப்பினர் சிவநேசதுரை சந்திரகாந்தன் அங்குள்ள நிலைமைகளையும் வசதிகளையும் அவதானித்திருந்தார்.

மேலதிக வசதிகள் தேவைப்படின் தற்காலிக கட்டிடங்களையும், கூடாரங்களையும் அமைத்து தருவதற்கு தாம் தயாராகவுள்ளதாகவும், தேவைப்படின் மட்டக்களப்பில் அமைந்துள்ள தமது மன்ரேசா நிலையத்தினையும் பயன்படுத்துமாறு, இதன்போது அருட்தந்தை அவர்கள் இதன்போது மேலும் தெரிவித்தார்.




தற்போதுள்ள சூழ்நிலையில் தாதியர்கள் மற்றும் சிற்றூழியர்களுக்கான தட்டுப்பாடு நிலவுவதன் காரணமாக கொரோனா சிகிச்சை நிலையங்கள் வைத்தியசாலைகளுடன் இணைந்ததாகவே இயங்கிவருகின்ற காரணத்தினால் எதிர்காலத்தில் நோயாளர்கள் அதிகரிக்கின்ற பட்சத்தில் இயேசுசபைக்கு சொந்தமான அந்த இடங்களை பயன்படுத்துவதற்கான முடிவுகளும் அவ்விடத்தில் அருட்தந்தையவர்களுடன் எட்டப்பட்டிருந்தது.

# பத்தினிபுரத்தில் காட்டு யானை தொல்லை பயிர் நிலங்களுக்கு பலத்த சேதம்

(ஹஸ்பர் ஏ ஹலீம்)

திருகோணமலை மாவட்டம்தம்பலகாமம் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பாலம்போட்டாறு பத்தினிபுர கிராமத்தில் நுழைந்த காட்டு யானையால் சேதம் விளைவிக்கப்பட்டுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

வேலியை உடைத்து ஊருக்குள் புகுந்த காட்டு யானையால் தங்களது பயிர் நிலங்களான வாழை, தென்னை, கத்தரி, வெண்டி, மரவள்ளி போன்ற பல பயிரினங்களை துவம்சம் செய்துள்ளதாகவும் தெரிவிக்கின்றனர். இரவு நேரங்களில் நிம்மதியாக தூங்க முடியாது சிறு குழந்தைகளை வைத்துக் கொண்டு அச்சத்துடனே வாழ வேண்டியுள்ளது. பாதுகாப்பானயானை வேலி உரிய பகுதிகளில் இன்மை உள்ளிட்ட பல காரணங்களினால் யானை தொல்லை அதிகரித்



துள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

காட்டு யானை தொல்லை தொடர்பில் உரியவர்களுக்கு பல முறை தெரிவித்தும் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாமை குறித்து கவலயடைவதாகவும் தெரிவிக்கின்றனர். தங்களது உயிருக்கு உத்தரவாதமின்றி வாழ்வதாகவும் தெரிவிக்கின்றனர். காட்டு யானை தொல்லையில் இருந்து தங்களுக்கான நிரந்தர தீர்வு கிட்டும் வரை அம்மக்கள் பெரும் எதிர்பார்ப்புடன் இருப்பதாகவும் உரிய அரச அதிகாரிகளுக்கு கோரிக்கை விடுக்கின்றனர்.

# தலவாக்கலை பகுதியில் தடுப்பூசி வழங்கும் தினங்கள்

(தலவாக்கலை பி.கேதீஸ்)

கொட்டகலை பொது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட 6 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் 30 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு கொவிட்-19 கொரோனா முதலாவது தடுப்பூசி வழங்கும் வேலைத் திட்டமானது இன்று 7ஆம் திகதி காலை 8 மணி முதல் நடைபெறவுள்ளதாக கொட்டக்கலை பொது சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் தெரிவித்துள்ளது.

அந்தவகையில் இன்று வட்டக்கொடை கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ளவர்களுக்கு வட்டக்கொடை தமிழ் மகா வித்தியாலயத்திலும் போகாவத்தை மற்றும் மவுண்ட்வேணன் ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ளவர்களுக்கு திம்புள்ள தமிழ் வித்தியாலயத்திலும் வழங்கப்படவுள்ளன.

8ம் திகதி புதன்கிழமை கிறேட்வெஸ்டன் கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ளவர்களுக்கு கிறேட்வெஸ்டன் தமிழ் வித்தியாலயத்திலும் ஒலிரூட் கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ளவர்களுக்கு சுமண மத்திய கல்லூரியிலும் வழங்கப்படவுள்ளன.

9ம் திகதி கூம்மூட் கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ளவர்களுக்கு பாரதி தமிழ் பாடசாலையிலும் வழங்கப்படவுள்ளன. குறித்த கிராம உத்தியோகத்தர் பிரவுகளில் வசிக்கும் 30 வயதிலும் கூடியவர்கள் உரிய திகதியில் தடுப்பூசிகளை பெற்றுக்கொள்வதற்காக மத்திய நிலையங்களுக்கு உரிய நேரத்தில் வருகை தருமாறு கொட்டக்கலை பொது சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் வேண்டுகோள் விடுக்கின்றது.

# திருகோணமலை மாவட்ட கொவிட் 19 செயலணி கூட்டம்



திருகோணமலை மாவட்ட கொவிட் செயலணிக் குழுக்கூட்டம் இன்று மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபர் சமன் தர்சன பாண்டிகோராள தலைமையில் நேற்று நடைபெற்றது.

மாவட்டத்தில் கொவிட் தடுப்பூசி ஏற்றல் நடவடிக்கை எவ்வித தடங்கலுமின்றி சிறப்பாக நடைபெற்றதாகவும் இதற்காக ஒத்துழைப்பு வழங்கிய சுகாதாரத்துறை, முப்படை, பொலிசார் மற்றும் தொடர்புற்ற அனைவருக்கும் நன்றிகளை தெரிவிப்பதாகவும் தெரிவித்தார்.

மேலும் அத்தியவசிய உணவுப் பொருட்களை தட்டுப்பாடின்றி மக்களுக்கு வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை உத்தியோகத்தர்கள் சுற்றி வளைப்புக்களை மேற்கொண்டு சட்டத்திற்கு முரணாக செயற்படும் வர்த்தர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தல் வழங்கியுள்ளதாகவும் இதன்போது மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

கொவிட் தொற்று அறிகுறியுடையவர்கள் தகவல்களை மறைக்காது செயற்படல் வேண்டும். தகவலை மறைத்து செயற்பட்டு நோய்த்தாக்கம் கூடியபோது வைத்தியசாலையை நாடுவதால் உயிரிழப்புக்கள் ஏற்படக்கூடிய வாய்ப்பு அதிகமாகும். மாவட்டத்தில் ஏற்பட்ட உயிரிழப்புக்களுள் அதிகமானவை அவ்வாறான தன்மையால் ஏற்பட்டது. எனவே மக்கள் இவ்விடயத்தில் பொறுப்புடன் செயற்படல் வேண்டும் என்று இதன்போது திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் டி.ஜி.எம்.கொஸ்தா தெரிவித்தார்.

மேலும் இக்கலந்துரையாடலில் கொவிட் மரணங்கள் தொடர்பான உடலங்களை தாமதியாது தகனம்/அடக்கம் செய்தல் உட்பட பல விடயங்களும் இதன்போது கலந்துரையாடப்பட்டன.

இக்கூட்டத்தில் மேலதிக அரசாங்க அதிபர் ஜே.எஸ்.அருள்ராஜ், முப்படை, பொலிஸ் அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள் மற்றும் துறைசார் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

# கேள்வி மனுக் கோரல்கள் அழைக்கப்படாமல் சொத்துக்கள் கையளிக்கப்படுவது பொறுப்பற்ற செயற்பாடாகும்



(துறையூர் சஞ்சயன்)

எந்தவித கேள்வி மனுக்கோரல்களும் அழைக்கப்படாமல் அரசினால் தெரிவு செய்யப்படுகின்ற நிறுவனத்திற்கு பாரிய சொத்துக்கள் கையளிக்கப்படுவதென்பது எதிர்கால சந்ததியினது நலன்களைக் கருத்திற் கொண்ட செயற்பாடாக அமையவில்லை என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் இளைஞர் அமைப்பாளரும் கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினரும் சட்டத்தரணியுமான ஆரிப் சம்சுதீன் தெரிவித்தார்.

துறைமுக அதிகார சபைக்குச் சொந்தமான 13 ஏக்கர் காணி சீன நிறுவனத்துக்கு கையளிக்கப்படவுள்ளதன் பின்னணி தொடர்பாக வினவிய போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

துறைமுக நகரத்திற்கு அண்மித்துக் காணப்படுகின்ற கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த 13 ஏக்கர் காணியுடனான சொத்துக்களை வெளிநாட்டு நபர்களுக்கு பெற்றுக்கொடுக்க, அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

துறைமுக நகரச் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டதுடன் அதனை நிர்வகிப்பதற்கான ஆணைக்குழுவும் ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டுள்ளது. அத்தோடு துறைமுகத்திற்கு சொந்தமான 13 ஏக்கர் காணி சீனாவின் சி.ஐ.சி.டி நிறுவனத்திற்கு கையளிக்கப்படவுள்ளது.

அரசாங்கம் செலன்திவா இன்வஸ்ட்மன் பிரைவேட் லிமிட்டெட் என்ற முதலீட்டு நிறுவனத்தை அமைத்து, கொழும்பில் இருக்கும் பெறுமதி வாய்ந்த காணிகள் மற்றும் பாரம்பரியக் கட்டிடங்களை உள்நாட்டு வெளிநாட்டு நபர்களுக்கு குத்தகைக்கோ உரித்துரிமைக்கோ வழங்குவதற்கு அரசாங்கம் தீவிர நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

வெளிப்படைத் தன்மையுடன் சட்டதிட்டங்களுக்குட்பட்டு அரசு அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமெனின் அதனை எவரும் வரவேற்பார்கள். ஆனால் இலங்கையரசு நாட்டினதும் மக்களினதும் நலன்களைக் கொண்ட செயற்பாடுகளில் இயங்குகின்றதா அல்லது தங்களுக்கு கிடைக்கின்ற தனிப்பட்ட நலன்களுக்காகவா இவ்வாறு செயற்படுகிறது என்கின்ற கேள்விக்கு விடை காண முடியாமலிருக்கிறது. மத்தள விமான நிலையம், ஹம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்தி, கொழும்பு துறைமுக நகரம் போன்றவற்றின் விளைவுகளை அவதானிக்கின்ற பொழுது மக்களினதும் எதிர்கால சந்ததியினதும் நலன்கள் கவனத்தில் எடுக்கப்பட்டதாக தெரியவில்லை என்றார்.

# மட்டக்களப்பு படுவான்கரையிலும் இராணுவத்தினரால் அஸ்ட்ரா செனெக்கா தடுப்பூசி ஏற்றும் பணிகள் ஆரம்பம்

(ரக்ஸனா)

மட்டக்களப்பு மாவட்டத்தில் இதுவரையில் தடுப்பூசிகளைப்பெற்றுக்கொள்ளாத 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான தடுப்பூசிகளை ஏற்றும் நடவடிக்கைகளை இராணுவத்தினர் தொடர்ச்சியாக முன்னெடுத்துவருகின்றனர்.

மட்டக்களப்பு, படுவான்கரை பகுதியில் இதுவரையில் தடுப்பூசிகளைப்பெற்றுக் கொள்ளாத 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகளை திங்கட் கிழமை முதல் இராணுவத்தினர் முன்னெடுத்தனர்.

இராணுவத்தின் 231வது படைப்பிரிவும் இராணுவத்தின் மருத்துவ பிரிவும் இணைந்து திங்கட் கிழமை பட்டிப்பளை பிரதேச செயலாளர் பிரிவில் இந்த தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகளை முன்னெடுத்தனர்.

திங்கட் கிழமை இதுவரையில் தடுப்பூசிகளைப் பெற்றுக் கொள்ளாத 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு அஸ்ட்ராசெனெகா தடுப்பூசிகளை இராணுவத்தினர் ஏற்றினர்.



பட்டிப்பளை பிரதேச செயலகப்பிரிவில் இதுவரையில் தடுப்பூசிகள் பெற்றுக் கொள்ளாத 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் கிராம சேவையாளர்கள் ஊடாக இனங்காணப்பட்டு இந்த தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

பெருமளவான தடுப்பூசிகளைப்பெற்றுக்கொள்ளாத 60வயதுக்கு மேற்பட்டவர்கள் தங்களுக்குரிய முதலாவது தடுப்பூசினைப்பெற்றுக்கொண்டதை காணமுடிந்தது.

# கொரோனாவை விடவும் விவசாயிகள் பற்றி பேசாமலிருக்கும் எம்.பிக்களே அதி கொடியவர்கள்



(ஏ.பி.எம்.அஸ்ஹர்)

கொரோனாவை விடவும் அழியப்போகும் விவசாயிகள் பற்றி பேசாமலிருக்கும் நமது எம்.பிக்களே அதி கொடியவர்கள் என கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் ஏ.எல்.தவம் தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

கிழக்கிலுள்ள மூன்று மாவட்டங்களிலும் வேளான்மை விவசாயம் என்பது மிகப்பிரதானமான வருமான வழியாக அமைந்துள்ளது. அதற்கு பிறகுதான் ஏனையவை எல்லாம். இந்த பிரதான வருமானத்தில் இன்றைய அரசினால் கைவைக்கப்பட்டுள்ளது.

பல தசாப்தங்களாக இரசாயன பசளை வகைகள் மற்றும் கிருமிநாசினிகளுக்கு பழக்கப்பட்ட விவசாயிகளும், நிலமும், விதைகளும் திடிரென சேதனபசளைக்கு மாற வேண்டும் என்பது பெரும் சோதனையாக அமைந்துள்ளது.

சாதாரணமான அங்கர் பால் பாவனையையே மாற்ற முடியாமல் - அங்கர் தேடி அலையும் அனுபவமே இதற்கு மிகச்சிறந்த உதாரணம். தன் நுகர்வுக்கோலத்தை மாற்றுவதற்கு மனிதனுக்கே இவ்வளவு சிரமம் என்றால் -முளை திறனும், வளர் திறனும், விளை திறன் என வேறுபட்ட கோலங்களையுடைய ஒரு படிமுறையை இலகுவாக மாற்ற முடியுமா? அதுவும் பல தசாப்தங்கள் பழக்கப்பட்ட ஒரு முறையை உடன் மாற்ற முடியுமா?

ஒருவருக்கு சொந்தமான நிலத்தில் கால்வாசியை அல்லது அரைவாசியை சேதன பசளையில் விவசாயம் செய்யவும் - மிகுதியை இரசாயன பயளையை பயன்படுத்தி விவசாயம் செய்யவும் அறிவுறுத்தி இருந்தாலும் - அது சற்று ஆறுதலாக இருந்திருக்கும். ஆனால், மொத்தமாக சேதன பசளையை பயன்படுத்தும் போது மொத்த விளைச்சலும் பாதிக்கப்பட்டு ஒரு சில வருடங்களில் வேளான்மை விவசாயத்தை கைவிட வேண்டிய நிலை ஏற்படலாம்.

சில பிரதேசங்களில் சேதன பசளையை பயன்படுத்தி வேளாண்மை விவசாயம் செய்வதிலுள்ள சிக்கல்கள் மற்றும் வருமான நஷ்டம் என்பவற்றை கருத்திற்கொண்டு தாம் இப்போகம் விவசாயம் செய்வதில்லை என விவசாய சங்கங்கள் கூறியதற்கு - அரச படைகளை பயன்படுத்தி உங்கள் நிலத்தில் விவசாயம் செய்யப்படும் என கூறப்பட்டுள்ளது.

இதனைப் பற்றி பேசவேண்டிய முஸ்லிம் எம்.பிக்களுக்கு இது பற்றி எந்த அக்கறையுமே இருப்பதாக தெரியவில்லை. அவர்கள் தமக்குசம்பந்தமில்லாத பிரச்சினை போல் இருக்கிறார்கள். ஏலவே அரசாங்கத்தோடு இணைந்துள்ள அதாவுல்லாவும் - 20க்கு கையுயர்த்தி அரசாங்கத்தோடு இணைந்துள்ள ஏனைய கட்சிகளின் முஸ்லிம் எம்.பிக்களும் இதனை பற்றி வாயே திறக்காமல் இருக்கிறார்கள்.

நாள் தோறும்
சுபீட்சம் மின்னிதழை
பார்வையிட
www.supeedsam.com

SAYENTHIRAN KATHIR
Geschäftsführer
STRAVEL
Flugtickets | Hotels | Reiseversichenungen
Luisenstr 21 8005 Zurich | info@stravel.ch www.stravel.ch
044 419 91 00 079 913 77 59

உதயகுமார் கல்வி நிலையம்
முனைக்காடு மேற்கு,
கொக்கட்டிச்சோலை
தொடர்புகளுக்கு:
076-1549129
+966539028295
+966502126923
n.uthayakumar1981@gmail.com

"கல்விக்கு கைகொடுப்போம்"
எல்லாவற்றையும் இழந்து நிற்கும் எமது சமூகத்தை
கல்வியால் மட்டுமே கட்டியெழுப்ப முடியும்
அறிவாலயம்
அறக்கட்டளை நம்பிக்கை நிதியம்
இலங்கை.
ஸ்தாபகர் அலையப்போடி நல்லரெத்தினம்
ARIVALAYAM FOUNDATION TRUST
தலைமைக்காரியாலயம்: பண்டாரியாவெளி, கொக்கட்டிச்சோலை
arivalayam@hotmail.fr +94 77 068 4555 | Sriram : +94 77 652 0206

SHELVA SWISS
YOUR FUTURE OUR VISION
041 790 64 63 079 514 64 28
வீட்டுக்கடன் 0.62% தொடக்கம்
10% இல் சொந்த வீடு கட்ட அல்லது வாங்க
- இருக்கும் வீட்டை வைத்து இன்னொரு வீட்டை வாங்க...
- வீடு வாங்க, விற்க, கட்ட, திருத்த...
- வீடு வாங்குவதற்கான ஆயுட்காப்புறுதி
- Architect வேலைகள்
இலங்கையில் வீடுகள், காணிகள், விற்க, வாங்க, கட்ட, திருத்த
இலங்கைக்கு போக வேண்டிய தேவை இல்லை.
SWISS இல் இருந்து கொண்டே செய்யலாம்.
» கிறங்கன்காசே » பயணக்காப்புறுதி
» ஆயுட்காப்புறுதி » சட்டக் காப்புறுதி

கிழக்கிலங்கையின் காரைதீவில் வெளிநாட்டு
துரித பொதிகள் சேவையில் புதிய பரிணாமம்
வெளிநாட்டில் இருக்கும் உங்கள்
உறவுகள் நண்பர்களுக்கு பொதிகள்
மற்றும் ஆவணங்களை துரித
வேகத்தில் உரிய முகவரியில்
கொண்டு சேர்க்க
இன்றே நாடுங்கள்
TA parcel.lk LOCAL & INTERNATIONAL COURIER SERVICE
TA ENTERPRICES & CO வின்
TA PARCEL.LK
துரித வேகம். London, Swiss, France, Canada 3 Days Only) Quick Service
உலகின் எப்பாகத்திற்கும் பொதிகள் அனுப்பும் வசதி. All Countries
பொதிகள் முழு (100%) காப்புறுதி செய்யப்படுகின்றது. 100% Insured
365 நாட்கள் 24 மணி நேர வாடிக்கையாளர்கள் சேவை. 365 Days 24 Hours Service
உரிய முகவரியில் கொண்டு சேர்க்கப்படும். Door to Door Delivery
இணையத்தளம் மூலம் உங்கள் பொதிகள் எங்கு உள்ளது என கண்டறியும் வசதி. Online Tracking System
சிறந்த பொதியாக்கம். Quality Packing
நீங்கள் பொதிகள் ஒப்படைக்கும் போதே Traking Number வழங்கப்படும்.
இவ்வாறான நம்பகதன்மைகளுடன் உங்கள் உறவுகளின் எதிர்பார்ப்புகளை கொண்டு சேர்க்கின்றோம்.
எங்கள் நிறுவனத்தின் ஊடாக பொதிகள் அனுப்பும் ஒவ்வொரு வாடிக்கையாளர்களுக்கும் பெறுமதியான பரிசில்கள் மற்றும் அன்பளிப்புகள் காத்திருக்கின்றது.
அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு விசேட விலைக்கழிவு.
வெளிநாடுகளில் இருந்து அனுப்பப்படும் பொதிகளையும் இங்கு பெற்றுக்கொள்ளலாம்.
TA PARCEL.LK | Main Street Karaithivu | taparcel.lk@gmail.com, +94774385151, +94752542651

Call us now!
0791023193
0787437071
MON-FRI 11.30 - 23.30
SATURDAY 11.30 - 23.00
SUNDAY 11.30 - 18.00
GRUNAU 1
ASIANFOOD
RESTAURANT
STARTER BIRIYANI SPL
BBQ CURRY DISHES
GRILL-TANDOORI FISH SPL
SPECIAL NAAN DESERTS - ICE CREAM
MIX SABJI COFFEE SPL
CALL WE DELIVER YOU - STAY HOME STAY SAFE
MEIERWISSENSTR 588064 ZURICH

# மன்னாரில் 90 மில்லியன் ரூபா நிதியுதவில் சமுர்த்தி பயனாளிகளுக்கு பொருளாதார ரீதியாக பலப்படுத்தும் திட்டம்

## சமூர்த்தி பணிப்பாளர் ஐ.அலியார்

(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் மாவட்டத்தில் சமூர்த்தி பயனாளிகள் குடும்பத்தினரை தங்கள் பொருளாதார ரீதியாக பலப்படுத்தும் நோக்குடன் மன்னார் மாவட்ட ஐந்து பிரதேச செயலகங்களிலிருந்தும் 2400 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கான திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் இதற்காக இவர்களின் வாழ்வாதார உயர்வுக்காக அரச உதவியாக மன்னார் மாவட்டத்துக்கு 90 மில்லியன் ரூபா நிதி உதவியாக கிடைக்கப்பெற்றுள்ளதாக மன்னார் மாவட்ட சமூர்த்தி பணிப்பாளர் ஐ.அலியார் இவ்வாறு தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட சமூர்த்தி பணிப்பாளர் ஐ.அலியார் மேலும் தெரிவிக்கையில்;

தெரிவு செய்யப்பட்ட சமூர்த்தி பயனாளிகளான குடும்பங்களை பொருளாதார ரீதியாக பலப்படுத்தும் நோக்குடன் மன்னார் மாவட்டத்திலும் இவ் திட்டம் தற்பொழுது முன்னெடுக்கப்பட்டுள்ளது.



இதற்கமைய மன்னார் மாவட்டத்தில் ஐந்து பிரதேச செயலகப் பிரிவுகளிலிருந்தும் சுமார் 2400 குடும்பங்கள் இவ் திட்த்துக்காக தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களின் வாழ்வாதார உயர்வுக்காக அரச உதவியாக மன்னார் மாவட்டத்துக்கு 90 மில்லியன் ரூபா நிதி உதவியாக எமக்கு கிடைக்கப்பெற்றுள்ளது.

இவ் நிதியைக் கொண்டு இவ் குடும்பங்களுக்கு விவசாயம். கைத்தொழில், மீன்பிடி, மீன் வளர்ப்பு இத்துடன் இவர்களுக்குத் தேவையான வாழ்வாதாரத்துக்குகாக முன்னெடுக்கப்படும் திட்டங்களுக்களுக்கும் இதற்கான பயிற்சிகள் மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளும் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கான சகல நடவடிக்கைகளும் சமூர்த்தி திணைக்களத்தின் ஆலோசனைகளுக்கு அமைவாகவும் மன்னார் மாவட்ட செயலாளரின் பணிப்புரைக்கு அமைவாகவும் இவ் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இவ் திட்டங்கள் சிறந்த முறையில் இடம்பெறுவதற்கு இவ் மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு பிரதேச செயலகங்களுக்கும் இதற்கான நிதிகளை விடுவித்துள்ளோம்.

இதனால் தற்பொழுது ஆரம்ப வேலைத் திட்டங்கள் தற்பொழுது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஆகவே இதன் பயனாளிகள் தங்கள் வருமானத்தை அதிகரிக்கவும் தங்கள் சுயதொழில்களிலும் இவர்கள் சார்ந்திருக்கின்ற தொழில்களிலும் தங்கள் வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்கான ஒரு பெரும் வாய்ப்பாக இது அமைந்துள்ளது என மன்னார் மாவட்ட சமூர்த்தி பணிப்பாளர் ஐ.அலியார் இவ்வாறு தெரிவித்தார்.

# 1967 நண்பர்கள் குழுமியத்தால் 1700 ரூபா பெறுமதியான உலருணவுப்போதிகள்











(வி.ரி.சகாதேவராஜா)

காரைதீவு 1967 நண்பர்கள் குழுமியத்தால் 1700ருபா பெறுமதியான உலருணவுப்பொதிகள் கல்முனை காரைதீவு மக்களுக்கு வழங்கிவைக்கப்பட்டது.

பிரான்ஸில் வாழும் நண்பர்கள் குழுமிய உறுப்பினர் ச.தேவகடாட்சத்தின் உறவுகள் வழங்கிய நிதியுதவியைக் கொண்டு இவ்வுதவிகள் வழங்கப்பட்டன.

1700ருபா பெறுமதியான 125 பொதிகள் தயாரிக்கப்பட்டு 125குடும்பங்களுக்கு வழங்கப்பட்டன. இவை கல்முனை பாண்டிருப்பு நீலாவணை மற்றும் காரைதீவுப்பிரதேசங்களில் வழங்கப்பட்டன.

காரைதீவு 1967 நண்பர்கள் குழுமியத்தலைவரும் மட்டு.பிரதிமாகாண நீர்ப்பாசன பணிமனை விசேடதர படவரைஞருமான (DOA) செ.மணிச்சந்திரன் தலைமையில் இவ்விநியோகம் நடைபெற்றது.

அவ்வமயம் பிரான்ஸிலிருந்து வந்த ச.தேசகடாட்சமும் சமுகமளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

குறித்த நண்பர்கள் குழுமியம்; காரைதீவில் 1967இல் பிறந்தவர்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து அமைத்த ஒரு குழுவென்பது குறிப்பிடத்தக்கது.

# அம்பாரையில் 40 ஆயிரம் சுவதாரணீ இமுனிட்டி பூஸ்டர்கள் வழங்கல்



(எம்.ஐ.எம்.றியாஸ்)

கொரோனா தொற்று மூன்றாம் அலையில் அம்பாரை மாவட்டத்தில் நோய் எதிர்ப்பு சக்தியை வலுவூட்டும் சுவதாரணீ இமுனிட்டி பூஸ்டர்கள் வீடு வீடாகச் சென்று மக்களின் கரங்களில் சேருமளவிற்கு இது வரையும் சுமார் 40ஆயிரம் பொதிகள் விநியோகிக்கப்பட்டுள்ளதாக நேற்று முன்தினம் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் ஆயுர்வேத இணைப்பாளரும், நிந்தவூர் மாவட்ட ஆயுர்வேத வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகருமான டொக்டர் எம்.ஏ.நபீல் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

அம்பாறை மாவட்டத்தில் இமுனிட்டி பூஸ்டர்கள் ஆலையடிவேம்பு, திருக்கோவில், பொத்துவில், அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று, கல்முனை, வளாத்தாப்பிட்டி, மங்களகம, அரந்தளாவை, லகுக்கல ஆகிய பிரதேச மக்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் சுவதாரணீ இமுனிட்டி பூஸ்டர்கள் வழங்கப்பட்டுள்ளன.

நிந்தவூர் மாவட்ட ஆயுர்வேத வைத்தியசாலையினால் கொவிட் மூன்றாவது அலை காரணமாக நிந்தவூர் பிரதேச மக்களுக்கு மாத்திரம் சுமார் 14 ஆயிரம் ஆயுர்வேத சுவதாரணீ இமுனிட்டி பூஸ்டர்கள் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன.

இச் செயற்பாடுகளில் வைத்தியர்களான எம்.எஸ்.எம்..நஜீப், திருமதி றிஸ்மியா, ஏ.சீ.டில்சாத், நிந்தவூர் இளைஞர் தன்னார்வ அணியின் பிரதம செயற்பாட்டாளர் ஆசிரியர் ஐ.ஏல்.ஏ. சலாம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். கொவிட் தாக்கம் மிகவும் அதிகமாக காணப்படும் இந்நிலையில் மக்கள் மீது அக்கறை கொண்டு ஆயுர்வேத வைத்தியசாலையினால் அர்ப்பணிப்பான இச்செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

எது எப்படி இருந்தும் மூன்றாம் அலையின் போது கொவிட் 19 அச்சுறுத்தல் மேசமடைந்துள்ள இக்காலகட்டத்தில நாம் எம்மைப் பாதுகாப்பதே பாரிய பணியாகும் .மக்களின் கவனயீனம், சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றமை என்பன இப்பரவலுக்கு பிரதான காரணியாகும். எனவே ஒவ்வொரு நபரும் எம்மைப் பாதுகாத்தால் இதன் அபாயத்திலிருந்து நமது குடும்பத்தையும், நமது பிரதேசத்தையும் மற்றும் நமது நாட்டையும் பாதுகாத்துக் கொள்ளலாம் என டொக்டர் எம்.ஏ.நபீல் மேலும் தெரிவித்தார்.




# சேதன பசளை உற்பத்தியை ஊக்குவிக்கும் வேலைத்திட்டம் நிந்தவூர் பகுதியில் ஆரம்பம்

(பாறுக் ஷிஹான்)

ஜனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்கு தேசிய வேலைத்திட்டத்தின் ஊடாக நாடு தழுவிய ரீதியில் விவசாயத் துறையில் முழுமையாக சேதன உரப் பயன்பாட்டை உறுதிப்படுத்தும் வகையில் சேதன பசளை உற்பத்தியை ஊக்குவிக்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.





இதற்கமைய அம்பாறை மாவட்டத்தின் நிந்தவூர் பிரதேச செயலக எல்லைக் குட்பட்ட பகுதிகளில் விவசாயிகளினால் சேதன பசளை தயாரிக்கும் முயற்சி சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் வெட்டுவாய்க்கால் பகுதியில் உள்ள ஆற்றுவாழைகள் கனரக வாகனத்தின் மூலம் அகழ்ந்து எடுக்கப்பட்டு குறித்த செயற்பாடு முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மேலும் குறித்த செயற்பாடுகளை நிந்தவூர் பிரதேச செயலாளர் சட்டத்தரணி ஏ.எம். அப்துல் லத்தீப் தலைமையிலான பிரதி திட்டமிடல் பணிப்பாளர் சுல்பிகார், சமூர்த்தி முகாமையாளர், கிராம உத்தியோகத்தர் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பிரதேச சபை உறுப்பினர் அடங்கிய குழு மேற்கொண்டு சேதனை உர உற்பத்தி மற்றும் பயன்பாட்டுக்கான மேலதிக ஆலோசனைகளையும் வழிகாட்டுதல்களையும் வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

# வேகமெடுக்கும் டெல்டா பிறழ்வுகள்

எனவே தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதைப் போன்றல்லாமல் மிகவும் இறுக்கமான முடக்கம் மேலும் இம்மாதம் 18 ஆம் திகதி வரையேனும் நீடிக்கப்படுமானால் சிறந்த பிரதிபலனைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று இலங்கை மருத்துவ சங்கத்தின் தலைவர் விசேட வைத்திய நிபுணர் பத்மா குணரத்ன தெரிவித்தார்.

இலங்கை மருத்துவ சங்கத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் ,

புதிதாக உருவாகிய அலையில் தொற்றாளர்களின் எண்ணிக்கை வீழ்ச்சியடையும் சந்தர்ப்பமாக நாம் இதனை காண்கின்றோம். போக்குவரத்து கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டதன் காரணமாகவே வைத்தியசாலைகள் நிரம்பி வழியக்கூடிய நிலைமையைக் கட்டுப்படுத்த முடிந்தது. அதே போன்று மரணங்களின் எண்ணிக்கையும் கணிசமானளவு குறைவடைந்துள்ளது.

இதே நிலைமையிலேனும் இம்மாதம் 18 ஆம் திகதி வரை முடக்கம் நீடிக்கப்படுமாயின் சிறந்த பிரதிபலனைப் பெற முடியும். இவற்றுக்கிடையில் தடுப்பூசி வழங்கும் பணிகளையும் துரிதமாக முன்னெடுத்துச் செல்வதும் அத்தியாவசியமானதாகும்.

எனினும் முழுமையான தடுப்பூசி வழங்கலை நிறைவு செய்தாலும் முடக்கம் தளர்த்தப்பட்டதன் பின்னரும் சுகாதார பாதுகாப்பு விதிமுறைகளை பின்பற்ற வேண்டியது பிரதானமானதாகும்.